ORIGINAL ARTICLE

# தமிழர் தம் மெய்யியலும் வாழ்வியலும்

## [TAMIZAR TAM MEYYIYALUM VAAZHVIYALUM]

## THE TAMIL LIFE PHILOSOPHY

**நா.ஹேம மாலினி [1] / N.Hemamalini [1]**

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா / Doctoral Candidate, International Institute of Tamil Studies, Chennai, India.
Email: hemamalinin07@gmail.com

DOI: https://doi.org/10.33306/mjssh/52

**ஆய்வுச் சாரம்**

மெய்யியல் என்பது பிலோசபி என்னும் சொல்லில் இருந்து உருவானதாகும். கிரேக்க மொழியின் வேர் சொல்லில் இருந்து இச்சொல் தோன்றியது என்பதன் அடிப்படையில் மெய்யியல் என்பது அறிவின் முதிர்ச்சி மெய்யியல் என்றாகிறது. அறிவின் முதிர்ச்சியில் மனிதன் தன்னைத் தானே உணரும் ஆற்றலைப் பெறுகிறான். தமிழரின் மெய்யியல் அவன் வாழ்வியலோடு பிணைந்த ஒன்றாக உள்ளது. தமிழன் தோன்றிய காலம் முதலே அவன் வணங்கும் தெய்வமாக இயற்கையைக் குறிக்கிறான். பிரபஞ்சத்தின் இயக்க சக்தி இயற்கை என்பதைத் துல்லியமாக அணுகி உள்ளான். மேலும், தான் கண்டறிந்தவற்றை வணங்குவதோடு மட்டும் அமையாது கதைகளாகவும், புராணத்தொன்மங்களாகவும், இதிகாசத் தொன்மங்களாகவும் அடுத்த தலைமுறையினருக்கும் உதவும் வகையில் இறைநம்பிக்கை வடிவில் மெய்யியலைக் கடத்தியுள்ளான். அவ்வாறு இலைமறை காயாகவும், வெளிப்படையாகவும் மக்களிடத்தில் சேர்க்க தேர்ந்த மொழியியல் அறிவைக் கையாண்டுள்ளான். அதன் வழியில் தமிழனின் தொன்மங்களை அணுக மொழியியலை உட்புகுத்தும் போது அதிகப்படியான மெய்யியல் அறிவை பெறமுடியும். அதாவது, இலக்கியங்களில் கையாண்டுள்ள நேரடிப்பொருள், மறைமுகப்பொருள், குறிப்புப்பொருள், வெளிப்படைப்பொருள், சூழல்பொருள், சுட்டல் பொருள், சுட்டல் மதிப்புப்பொருள், உணர்தல் பொருள், பிரதிபலிப்புப் பொருள் என்று இன்னப்பல பொருள்களை ஆராய்வதன் மூலம் பல்வேறு வகையான மெய்யியல் அறிவை வெளிப்படுத்த முடியும் என்பதாக இவ்வாய்வு அமைகிறது.

**கருச்சொற்கள் :**தமிழர், மொய்யியல், வாழ்வியல்

**Abstract**

"Meyyiyal" can be defined as a theory or attitude that acts as a guiding principle for behaviour. The development of "Thamizhans" is depending on two factors namely, "Meyyiyal" and "Vazhviyal" as an interconnected agent. Nature worship system largely practiced by "Thamizhans" with a strong belief that nature or god are part of or in charge of universe. In addition, "Thamizans" successfully transform "Meyyiyal" to the next generation through tales and myths by enhancing "Mozhiyiyal". It is also identified that in the line of identifying speciality of "Thamizhans" through "Mozhiyiyal" where "Meiyiyal" are nurtured. Therefore, this study discuss about 'Neradiporul', 'Maraimugaporul', 'Kurippuporul', 'Velippadaiporul', 'Suzhalporul', 'Suttalporul', 'Suttalmatippuporul', 'Unarthalporul' and 'Pirathipalipuporul' as the elements involved in "Meiyiyal".

**Keywords:** The Tamil, Philosophy, Life Style

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 10th September 2019, revised 5th October 2019, accepted 1th November 2019

**முன்னுரை:**

மெய்யியல் என்னும் பதமானது ஆங்கிலத்தில் (phylosophy) பிலோசபி என அழைக்கப்படும். பிலோசபி எனும் சொல்லானது Sophya எனும் கிரேக்க சொல்லில் இருந்து உருவானதாகும். Sophya எனும் பதமானது Love of wisdom எனப் பொருள்படும். இது மெய் அறிவைத் தேடு அல்லது மெய் அறிவை நேசி எனப் பொருள் படும். பண்டையத் தமிழனின் வாழ்வும் மெய்யியலைச் சார்ந்த வாழ்வாக இருந்துள்ளது என்பதற்கு அவன் பயன்படுத்தியுள்ள மொழிக் கூறுகளே சான்றாகின்றன.

**மெய்யியல் என்பது ஓர் "பாஷைப் பகுப்பாய்வு":**

மெய்யியல் என்பது ஏதாவது ஒரு துறையில் பயன்படுத்த வேண்டிய எண்ணக் கருத்துக்கள் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெறும் முயற்சி குறித்த அந்தத் துறை சார்ந்த மெய்யியலாகும். மனித எண்ணங்களை நாம் மொழி ரீதியில் வெளியிடும் போது எண்ணத்தில் ஏற்படும் மனக்கலப்பை மொழியிலும் ஏற்படலாம். இத்தகைய பாஷை மனக்கலப்பைத் தீர்ப்பதுதான் மெய்யியல் என 'விக்கினிஸ்ரன்' எனும் தத்துவஞானி கூறுகின்றார் (கேசவன், 1998)[1]. மொழியின் வடிவங்களை நாம் தவறாகப் புரிந்து கொள்ளும் போது மெய்யியல் பிரச்சனைகள் தோன்றுகிறது என இக்கருத்து அமைகிறது.

**கடவுள் மெய்யியலும் தொன்மமொழிகளும்:**

கடவுள் என்பது சமய மெய்யியலில் இடம் பெறுகின்ற ஓர் எண்ணக் கருவாகும். கடவுள் என்னும் விடயத்தில் கடவுளின் இருப்பு, கடவுளின் காண்டல், கடவுளின் அனுபவம் என்னும் மூன்று பிரதான கருத்துக்கள் காணப்படுகின்றது.

**"**வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டயர்ந்த காந்தளும்**" (**தொல்-புறத்திணையியல்**)**
(இராசேந்திரன், 2099)[2]

தெய்வம் மக்கள் மீது ஆடப்படும் ஆட்டத்தை 'வெறியாட்டு' என்பர். வெறி என்னும் பலபொருள் ஒருசொல் இங்கு தெய்வத்தைக் குறிக்கின்றது. முருகக் கடவுளை வழிப்படுவதற்காக நிகழ்த்தப்பட்ட ஆட்டக்கலை வேலன் வெறியாட்டு எனப்பட்டது. முருகனாகிய தெய்வம் ஆண்பாலாகிய வேலன் மேல் பெண்பாலாகிய தேவராட்டி மேல் அருளேறி வந்து வசித்து ஆடப்படும் ஆட்டம் 'வெறியாட்டம்' என்பர்.

**"**கடியுண் கடவுட்கு இட்ட செழுங்குரல்
அறியாதுண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்**" (**குறுந்தொகை-12)[3]

கடவுளுக்கென்று வைக்கப்பட்டுள்ள உணவுப்பலியினை உண்ட மயில், தெய்வமுற்று ஆடுவதைப் போல தலைவனுடன் கொண்ட உறவால் தலைவியும் வெறியாட்டு ஆடுகின்றாள் என்பது இதன் பொருள்.

"வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்" என்னும் வரி கடவுளின் அனுபவம் பெற்றவர் அடையும் மெய்பாடாக அமைகிறது.

**நேரடிப் பொருள்**:

கடவுளின் பலியை எடுப்பதால் அல்லது தெய்வ நிந்தனைக்குட்பட்டவர்கள் தண்டிக்கப் படுவர் என்பதாகும்.

**குறிப்புப்பொருள்**:

தலைவனுடனான களவொழுக்கத்தால் தலைவி அடையும் துயரைப் பற்றியது (தொல்காப்பியம்-நச்சினார்க்கினியர் உரை)[4].

**சுட்டல் பொருள்:சுட்டல் மதிப்புப்பொருள்:**

வனப்பின் நடுங்கும்-சுட்டல் பொருள்;
வெய்துற்று நடுங்கும்-துன்ப்ப்பட்டு நடுங்கும்
(அச்ச உணர்வு)-சுட்டல் மதிப்புப்பொருள்

**அண்டவியல் வாதம்:**

உலகில் உள்ள அனைத்துப் பொருட்களும் மாறும் தன்மையுடையனவே ஆகும். தான் மாறாது அனைத்தையும் மாற்றியமைக்கின்ற வல்லமை முதல் பொருளாம் கடவுளையேச் சார்ந்தது ஆகும். அண்டவியலாளரின் வாதப்படி, பிரபஞ்சத்தின் அனைத்து சக்தியுமாக திகழ்வது கடவுள் என்பதாகும்.

"மாயோன் மேய காடு உறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"
(பொருள்:அகத்திணையியல்)

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நானிலத்திற்கும் உரிய தெய்வங்களாக திருமால், முருகன், இந்திரன், வருணன் குறிப்பிடுகின்றனர்.

**"**வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்**"**

"வினையின் நீங்கிய முனைவன்" என்பதாலேயே அவன் என்றுமே வினையினால் கட்டப்பாதவன் என்பது பெறப்படுகிறது. பழந்தமிழர்கள் முழுமுதற் கடவுளையே தம் கருத்தில் கொண்டிருந்தனர் என்பர். "கடந்து நிற்பவர் என்பதால் கடவுள்" என்பதாகும்.

**பிரபஞ்சம் பற்றிய மெய்யியல்:**

கமழ்குரல் தூழாஅய்:

"கண்பொரு திகிரிக் கமழ்குரல் துழாஅய்
அலங்கற் செல்வன் சேவடி பரவி" (பதிற்றுப்பத்து-31)

கமழ்குரல் துழாஅய் அலங்கல்=மணங் கமழ்கின்ற பூங்கொத்துக்களையுடைய துளசி மாலை. துழாய் அலங்கல் செல்வன்=துழாய் மாலைச் செல்வன்=திருமால்.
கோயிலில் மக்கள் அவனைப் பரவியச் செய்தி இடம் பெற்றுள்ளது (செல்லப்பா, 1918)

"தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்தும்
ஞாயிறும்,திங்களும்,அறனும்,ஐவரும்,
திதியின் சிறாரும்,விதியின் மக்களும்
மாசு இல் எண்மரும்,பதினொரு கபிலரும்,
தா மா இருவரும்,தருமனும்,மடங்கலும்
மூ-ஏழ் உலகமும்,உலகினுள்மன்பதும்
மாயோய்! நின்வயின் பரந்தவை உரைத்தேம்".
(பாரிப்பாடல்)

ஐம்பூதமாக,கோள்களாக,மூவுலகாகவும் இருப்பவன் இறைவன். இறைவன் இருக்கின்றானா? இறைவன் எந்த வடிவில் இருக்கிறான்? இறை அனுபவம் எத்தகையது? என்னும் வினாக்களுக்கு விடையாக இப்பாடல் அமைவதைக் காணலாம்.எனவே சங்க காலத்திலேயே தமிழன் மெய்யியல் உணர்வோடு வாழ்ந்துள்ளான் என்பதை அறியலாம்.

சுட்டல் பொருள்:
தீ,காற்று,வானம்,நீர்,நிலம் = பஞ்ச பூதங்கள்
பிரதிபலிப்புப் பொருள்:
மாயோய்!நின்வயின் பரந்தவை உரைத்தேம்=உலகின் அனைத்துமாக இருப்பவர் திருமால்.

**நிமித்தக் காரணங்கள்:**

டேக்காட் என்னும் மெய்யியல் அறிஞர் இறைவனது இருப்பை நிலைநாட்டுவதற்கு மூன்று முக்கிய நியாயங்களை முன்வைக்கின்றார்.

1. காரண காரிய அடிப்படை

2. நான் இருக்கின்றேன் என்ற உண்மையில் இருந்து இறைவனின் இருப்பை நிலைநாட்டல்.
3. உண்மையியல் காரணம்

கடவுள் இருக்கிறார் என்பது எமது புலன் அனுபவத்திற்கு அப்பாற்பட்டு இருந்த போதும் கூட கடவுள் இருக்கின்றார் என்பது அந்த இருப்பிலே அவர் இருப்பிலே அவர் இருக்கின்றார் என சமய நம்பிக்கையாளர்கள் கூறுகின்றார். இவர் உண்மையில் காரணத்தின் மூலம் கடவுளின் இருப்பை நிறுவுகின்றார்.

**"**தண்கயத்து அமன்ற வண்டு படுதுணை மலர்ப்
பெருந்தகை இழந்த கண்ணினை**,**பெரிதும்
வருந்துனை**,** வாழியர்**,** நீயே**!** வடாஅது**"**

**(**அகம்-59)

திணை**:**பாலைத்திணை
துறை**:**களிற்றியானைநிரை

தலைமகன் பிரிவின் கண் வேறுபட்ட தலைவிக்கு, தோழிச் சொல்லியது. மரத்தை வளைத்துக் கீழே சாய்த்தானே அந்தத் திருமால்! அதைப் போல் இந்த யானை மரத்தை வளைத்துத் தன் பிடிக்கு ஊட்டுவது பார்.

அரக்கர்கள் ஆயர்ப்பாடியில் மரமாக உருவெடுத்தல் போது, ஆயர்களைக் காத்தவன் திருமால். அதே போல, நம்மை காக்கவும் தலைவன் வருவான் என்பது தொன்மத்தின் அடிப்படையில் தோன்றிய நிமித்தக் காரணமாகும்.

**"**வல்லார் ஆயினும்**,**வல்லுநர் ஆயினும்
புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன**,**
உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற**!"**

**(**புறம்-57)

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை காரிக்கண்ணனார் பாடியது.

வல்லமை கொண்டார் வல்லமை இல்லாதார் என்று பேதம் பார்க்காமல் அருளும் மாயோன் போல்... புகழ் சால் பாண்டியா நன்மாறா என்று வியத்தல்.

**காரணக்காரியத் தொடர்பு:**

திருமாலின் உவமை அனுபவம் இத்தகு தன்மையில் அமையக் காணலாம். வேண்டியவர், வேண்டாதாவர் என்று பாராமல் எப்போதும் அருளை அளிப்பவன் இறைவன். அதேப் போல் மன்னனும் கொடையினை அளிக்கின்றான் என்பதாகும்.

**முடிவுரை:**

மேற்கண்ட கோட்பாடுகள் மற்றும் விளக்கங்களில் இருந்து சங்ககால மக்கள் தொன்ம சிந்தனையிடனும், மெய்யியல் உணர்வோடும் இருந்துள்ளனர் என்பதை அறியலாம். கடவுள் பற்றிய மெய்யுணர்வும், இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள தொன்மங்களும் ஒன்றோடொன்று பொருந்தியுள்ளதை நிறுவலாம்.

**துணை நூற்பட்டியல்:**


1. Kesavan, K. (1998). *Philosophy (மெய்யியல்).* Colombo: Gopika Publications.
2. Rajendran, S. (2009). *Porunmaiyiyal (பொருண்மையியல்).* Thanjavur: Tamil University.
3. *Ettuttokai books sources and texts (எட்டுத்தொகை நூல்கள் மூலமும் உரையும்)* – Saiva Siddhanta Novelty Corporation.
4. *Tholkappiyam – Naccinarkiniyar text (தொல்காப்பியம் - நச்சினார்கினியர் உரை).* (2010). Chennai: Sharada Publications.
5. Chellappah. (1918). *Tonmam (தொன்மம்).* Madurai: Kadirmahadevan Publications.